தரைப் பந்தல், கதிரைகள்,
சில்வர் கப், பீங்கான்
இன்னும் பல
உபகரணங்களை
வாடகைக்கு பெற
நாடுங்கள்
"ஒளி இல்லம்"
210, பிரதான வீதி,
(யாகப்பர் ஆலய மருங்கில்)
யாழ்ப்பாணம்

நல்லூர் [illegible] நூலகம்
யாழ்ப்பாணம்

பக்கங்கள், நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
5-00

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆவணி 06 திங்கட்கிழமை (22 - 08 - 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 268

For all Ceremonies
Bt your homes
Our Service available
OLI ILLAM
210, MAIN STREET,
(Near St. James Church)
JAFFNA.

அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவு தந்து சலுகைகளைப் பெற ஈ. பி. டி. பி. முயற்சி!

நாடாளுமன்றம் கூடும் நேரம்

புதிய நாடாளுமன்றம் கூடும் சுபநேரமாக காலை 10 மணியை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு தெரிவு செய்துள்ளது.

எனினும் நேரம் பற்றிய இறுதி முடிவை ஜனாதிபதியே வெளியிடுவார் என்று ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஐ-எ)

ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சை இன்று முதல் 2ஆம் கட்டம்

வினாத்தாள்கள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், ஒ. 22

ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையின் இரண்டாவது கட்டப் பரீட்சை இன்று திங்கள் முதல் ஆரம்பமாகவுள்ளது. அடுத்த மாதம் முதலாம் திகதிவரை இந்தப் பரீட்சை தொடர்ந்து நடைபெறும்.

இரண்டாவது கட்டப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் கடந்த வெள்ளிக்கிழமையே விமானம் மூலம் பலாலிக்கு எடுத்து வரப்பட்டு அங்கு வைக்கப்பட்டிருந்தன.

நேற்றுக் காலை பருத்தித்துறைக்கு வந்த "நரோமா" கப்பல் பயணிகளை இறக்கிவிட்டு காங்கேசன்துறைக்குச் சென்று அங்கிருந்து வினாத்தாள்களை பருத்தித்துறைக்கு எடுத்து வந்தது.

பரீட்சையின் இரண்டாம் கட்டம் திட்டமிட்டபடி நடைபெறும் என்று பரீட்சை ஆணையாளர் திரு. ஆகரி வெதமுல்ல அறிவித்துள்ளார். (உ-3)

‘கோமாரி’, ‘மாஹேறா’ வியாழன் வந்து சேரும்

யாழ்ப்பாணம், ஒக. 22

கொழும்பு துறைமுகத்தில் பொருள்கள் ஏற்றிக்கொண்டிருக்கும் 'கோமாரி' 'மாஹேறா' கப்பல்கள் நாளை வடக்கு நோக்கி புறப்படவிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

'கோமாரி' கப்பலில் தனியார் அமைப்புகளுக்கான பொருள்களும் — 'மாஹேறா' கப்பலில் 500 தொன் மா மற்றும் 2 ஆயிரம் மெற்றிக் தொன் சீனி ஆகியனவும் — எடுத்துவரப்படவிருக்கின்றன.

எதிர்வரும் வியாழக்கிழமை இந்த இரண்டு கப்பல்களும் பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-3)

வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த

3 ஆயிரம முஸ்லிம்களை வாக்களிக்க விடவில்லை

கொழும்பு, ஒ. 22

யாழ் மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து புத்தளம் மாவட்டத்தில் தங்கியிருக்கும் முஸ்லிம்களில் சுமார் 3 ஆயிரம் பேர் வாக்களிக்க முடியாமல் வாக்களிப்பு நிலையங்களில் இருந்து திரும்பியதாக தேர்தல் ஆணையாளரிடம் முஸ்லிம் காங்கிரஸ் முறைப்பாடு செய்துள்ளது.

அங்குள்ள அதிகாரிகள் மேற்படி முஸ்லிம் வாக்காளர்களை வாக்களிக்க விடாது திருப்பி அனுப்பியமை மனித உரிமை மீறும் செயலாகும் என்று முஸ்லிம் காங்கிரஸ் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளது. (உ-3)

நிர்க்கதி நிலையிலிருந்து தப்ப பகீரதப் பிரயத்தனம்!

கொழும்பு, ஓகஸ்ட் 22

சந்திரிகா குமாரணதுங்க தலைமையிலான பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு நிபந்தனையற்ற முறையில் ஆதரவு வழங்குவதன் மூலம் தாம் தற்போது அனுபவித்து வரும் சலுகைகளைத் தொடர்ந்து அனுபவிக்க ஈ.பி.டி.பியினர் முயற்சித்து வருகின்றனர்.

ஏ. எவ். பி செய்தியாளர் அபி ஜயசிங்க இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

யாழ். தேர்தல் மாவட்டத்தில் ஒன்பது எம்.பிக்களைப் பெற்றுக் கொண்டதன் மூலம் நாடாளுமன்றத்தில் மூன்றாவது பெரிய குழு என்ற நிலையை ஈ. பி. டி. பி. சார்பில் போட்டியிட்ட சுயேச்சைக் குழுவினர் பெற்றிருப்பது தெரிந்ததே.

முந்திய ஐ. தே. க. ஆட்சியின் கீழ் ஈ. பி. டி. பி. குழுவினர் அனுபவித்து வந்த சலுகைகள் நீக்கப்படக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகவும் ஏ. எவ். பி. செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

முன்னைய அரசு இதுவரை காலமும் அக்குழுவுடைய செலவுக்கு நிதி வழங்கி வந்தது. ஆயுதங்களும் கொடுக்கப்பட்டன — இவையெல்லாம் புதிய அரசினால் அகற்றப்படக்கூடிய நிலை ஏற்படலாம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

ஈ.பி.டி.பி.-கடற்படை முறுகல்நிலை ‘நரோமா’ விடயத்தால் முரண்பாடு

கொழும்பு, ஒ. 22

திருமலையில் உள்ள ஈ. பி. டி. பி. குழுவினருக்கும் அங்கு பணிபுரியும் கடற்படையினருக்கும் இடையே பெரும் முறுகல் நிலை ஏற்பட்டிருக்கிறது.

திருமலைக்கும் பருத்தித்துறைக்கும் இடையே பயணிகள் சேவையில் ஈடுபட்டுவரும் ".நரோமா" கப்பல் விவகாரம் தொடர்பாக இரு பகுதியினருக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடே முறுகல் நிலைக்கு வளர்ந்துள்ளதாம்.

"நரோமா" கப்பலுக்கு பயணிகளை அனுமதிப்பது உட்பட அது தொடர்பான விடயங்களை ஈ. பி. டி. பி. குழுவினரே இதுவரை கவனித்து வந்தனர். கப்பலில் பயணம் செய்யும் பயணிகளை அனுமதிக்கும் விடயத்தில் தமது விருப்பப்படியே அவர்கள் செயற்பட்டு வந்தனர்.

நரோமா" கப்பல் நேற்று முன்தினம் திருமலையில் இருந்து வடக்கே புறப்படத் தயாரான வேளை அவசரமாகச் சிலரை அழைத்து வந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

யாழ்.தேர்தலை எதிர்த்து மனு: தமிழ்க் கட்சிகள் பின்னடிப்பு?

கொழும்பு, ஒ. 22

யாழ். மாவட்டத் தேர்தல் தொடர்பாக நீதிமன்றத்துக்குச் செல்வது தற்போது நாடாளுமன்றத்தில் தமிழ்க் கட்சிகளுக்கு உள்ள செல்வாக்கைப் பாதித்து விடும் என்பதால் —

தற்போது நாடாளுமன்றத்தில் இடம்பெற்றுள்ள தமிழ்க் கட்சிகள் மேற்படி தேர்தல் தொடர்பாக நீதிமன்றத்துக்குச் செல்வதில் சிரத்தை காட்டா என்று அவதானிகள் கருத்து வெளியிட்டனர்.

யாழ் மாவட்ட தேர்தலுக்கான அறிவிப்பு வெளியாகி நியமனப்பத்திரங்கள் கோரப்பட்ட வேளையில் —

யாழ் மாவட்டத்தில் தேர்தல் நடத்தப்படுவதை ஆட்சேபித்து தமிழர் விடுதலைக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

சந்திரிகாவுக்கு தொண்டா புகழாரம்!

அணி மாற அவர் முடிவு?

கொழும்பு. ஒ. 22

"பிரதமர் சந்திரிகா குமாரணதுங்க இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணத் திடசங்கற்பம் பூண்டிருப்பதும் —

அரசியல் ரீதியான வன்செயல்களை அவர் கண்டித்திருப்பதும் —

இந்த நாட்டில் ஒரு புதிய அரசியல் கலாசாரம் உருவாகி வருகிறது என்பதற்கு தெளிவான அறிகுறிகளாகும்.

இ. தொ. கா. தலைவரும் முன்னாள் அமைச்சருமான எஸ். தொண்டமான் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் வெளி

(4 ஆம் பக்கம் பார்க்க)

தொண்டா அணி மாறினால்

ஜனாதிபதித் தேர்தலில் பொ. ஐ. மு. இலகு வெற்றி

கொழும்பு. ஒ. 22

பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு தொண்டமான் தலைமையிலான, இ. தொ. கா. ஆதரவளிக்க முடிவு செய்யுமாயின் —

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் இலகுவாக வெற்றியீட்டும் வாய்ப்பு ஏற்படும்.

இவ்வாறு பி. பி. ஸியின் சிங்களச் செய்தியாளர் எல்மோ பெர்னாண்டோ கருத்து வெளியிட்டார்.

சந்திரசேகரனுக்கு அமைச்சர் பதவி?

கொழும்பு. ஒ. 22

பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சி அமைப்பதற்கு உதவிய மலையக மக்கள் முன்னணியின் தலைவர் திரு. பெ. சந்திரசேகரனுக்கு அமைச்சர் பதவி வழங்கப்படலாம் என்று நம்பிக்கையாகத் தெரியவருகிறது.

மலையகத் தமிழர்களின் நலன்களைக் கவனிக்க அமைச்சரவையில் ஒருவர் அங்கம் வகிப்பது விருப்பத்துக்குரியது என்று பொ. ஐ. முன்னணி தலைமைப்பீடம் கருதுவதாகத் தெரியவருகிறது.

சந்திரசேகரனுக்கு அமைச்சர் பதவி வழங்குவதன் மூலம் தொண்டமானின் அரசியல் செல்வாக்கைக் குறைக்கலாம் என்ற கருத்தும் நிலவுவதாகச் சொல்லப்படுகிறது.

இதே வேளை, ராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்படும் போது முஸ்லிம் காங்கிரஸுக்கு இரண்டு இடங்கள் வழங்கப்படும் எனவும் தெரியவருகிறது. [உ-3]

அரசு, எதிரணி இணைந்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு

மதத்தலைவர்கள் ஒன்றாக வலியுறுத்து

கொழும்பு ஒ. 22

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விஷயத்தில் அரசாங்கமும் எதிர்க்கட்சியும் கருத்துடன்பாடுகண்டு கூட்டு அணுகுமுறை ஒன்றை கடைப்பிடிக்க வேண்டும் என்று சமயத்தலைவர்கள் மற்றும் அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் தலைவர்கள் அடங்கிய குழு ஒன்று வேண்டுகோள் விடுத்துள்ளது.

பொதுத் தேர்தல் முடிந்த பின்னர் ஜனாதிபதி விஜேதுங்காவுக்கு அனுப்பிய அறிக்கை ஒன்றில் இக்குழு முன்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பொதுத் தேர்தல் அமைதியாக முடிந்தது குறித்து எமது திருப்தியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம்.

பொதுத் தேர்தல் முடிந்த பின்னர் எழுந்துள்ள நிச்சயமற்ற நிலைவரம் பற்றி நாம் ஆராய்ந்தோம்.

மக்கள் முன் உள்ள பிரச்சினைகளில் இனப்பிரச்சினை மற்றும் அரசமைப்பு முறையில் மாற்றம் செய்வது ஆகியன குறித்து உடனடியாக கவனமெடுத்து தீர்வு காண வேண்டியுள்ளது.

இந்த இரண்டு பிரச்சினைகளுக்கும் எந்தத் தனிக் கட்சியினாலும் தீர்வுகண்டு விடமுடியாது.

இப் பிரச்சினைகள் குறித்து

(4ஆம் பக்கம் பார்க்க)

முன்னைய எதிரணியினர் போன்று

தீர்வு காண ஒத்துழைப்பு தராமல் இருக்கமாட்டோம்

ரணில் அறிவிப்பு

கொழும்பு, ஒ. 22

நாம் ஆட்சியில் இருந்த போது இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்கு அப்போதைய எதிரணியினர் ஒத்துழைக்க மறுத்தனர். அதுபோன்று நாம் எதிரணியில் இருந்து கொண்டு செயற்பட மாட்டோம்.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவி விலகுவதற்கு முன்பு நடத்திய செய்தியாளர் மாநாட்டில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

தேர்தலில் தோல்வியடைந்ததற்கான தார்மீகப் பொறுப்பை ஏற்று ராஜினாமாச் செய்யும் கடப்பாடு ஜனாதிபதிக்கு இல்லையா என்ற கேள்விக்கு —

"இல்லை அப்படி ஒரு கடப்பாடு கிடையாது. அரசமைப்பின் கீழ் ஆற்றவேண்டிய கடமைகள் ஜனாதிபதிக்கு உண்டு" — என்று ரணில் பதிலளித்தார்.

தேர்தலில் ஐ. தே. க. அடைந்த தோல்வி குறித்து, தேர்தல் பிரசாரத்தை தலைமை வகித்து நடத்திய ஜனாதிபதியின் கருத்து என்ன என்ற கேள்விக்கு பதிலளிக்கையில், இதுபற்றி ஜனாதிபதியுடன் தாம் [illegible] என்று அவர் தெரிவித்தார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

வவுனியாவில் தமிழ் இளைஞர் சுட்டுக்கொலை

கொழும்பு. ஒ. 22

வவுனியா கூமாங்குளம் சந்தியில் கடந்த வாரம் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார்.

உக்குளாங்குளத்தைச் சேர்ந்த சந்திரகுலசிங்கம் என்னும் (21 வயது இளைஞரே கொல்லப்பட்டவராவார்.

தெற்கு இலுப்பைக் குளத்தைச் சேர்ந்த சிவஞானம் என்பவர் காயமடைந்தார்.

இனந்தெரியாதவர் இத்துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

முச்சந்தி முரளி

[illegible] மாதிரி
ஆப்பிழுத்த குரங்கு மாதிரி
[illegible]

எமது அரசுக்கு ஒத்துழைப்புத் தராவிடில்

ஜனாதிபதிக்கு நிதி தராமல் செயற்பாட்டை முடக்குவோம்!

பொ. ஐ. மு. எச்சரிக்கை

கொழும்பு, ஒ. 22

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு ஜனாதிபதி விஜேதுங்க தமது அதிகாரங்களைப் பயன்படுத்தி சங்கடங்களை விளைவிப்பாரேயானால் —

ஜனாதிபதி அலுவலகத்தை செயல்படுத்துவதற்கு தேவையான நிதியை வழங்காது முடக்குவோம்.

— இப்படி பொதுமக்கள் ஐக்கிய முன்னணிப்பேச்சாளர் ஒருவர் தெரிவித்ததாக "டெய்லி நியூஸ்" பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் உள்ள பெரும்பான்மைப் பலத்தைப் பயன்படுத்தி ஜனாதிபதியின் நடவடிக்கைகளை நிறுத்துவோம். ஜனாதிபதி செயலகத்தை இயக்குவதற்குத் தேவையான பணத்தை ஒதுக்காமல் செய்யமுடியும். அதனால் பெரும் ஸ்தம்பிதநிலை ஏற்படும் — என்றும் அவர் கூறினார்.

விஜேதுங்கா மீது நிறைவேற்றப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானமாகவே ஐ. தே. க. தோல்வியை அரசியல் பகுப்பாய்வாளர்கள் கருதுவதாகவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

ஐ. தே. க. தோல்வி விஜே

(4 ஆம் பக்கம் பார்க்க)

ஐ. தே. க. தலைமை பதவிக்கும் போட்டியிடுகிறார் காமினி!

அவரே அறிவிப்பு

கொழும்பு, ஒ. 22

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமையை ஏற்கும்படி கட்சியின் மூத்த தலைவர்கள் தம்மை நிர்ப்பந்திப்பதாக, முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்கா தெரிவித்திருக்கிறார்.

பி. பி. ஸிக்கு அளித்த பேட்டி ஒன்றில் அவர் இத்தகவலை வெளியிட்டார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பத்தாவது நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி தோல்வி அடைந்ததற்கான மூன்று காரணங்களையும் அவர் அப்பேட்டியில் வெளியிட்டார்.

பதினேழு ஆண்டுகளாக, இடைவெளியின்றி தொடர்ச்சியாக நாட்டை ஆட்சி செய்து வந்தமை, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு; வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியனவே அக்காரணங்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த தேர்தலில் வெற்றியீட்டுவதற்கு வசதியாக கட்சியின் மூத்த தலைவர்கள் சிலர் பதவி விலகும்படி கேட்டுக்கொள்ளப்பட்டனர். எனினும் அவர்களைப் பதவி விலகச் செய்வது மிகவும் கடினமாக இருந்தது என்றும் அவர் கூறினார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் தேசியப்பட்டியலில் இருந்து முன்னாள் அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளருமான சிறிசேன கூரேயின் பெயர் நீக்கப்பட்டதற்கான காரணத்தைத் தம்மால் கூற முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

பல இன வளர்ப்பு கனி மீன்களும் மற்றும் ஒரு மாதம் நிரம்பிய நல்ல இன பொமெனேரியன் நாய்க்குட்டிகள் (கறுப்பு, வெள்ளை, பிறவுண் நிறம் உடையவை விற்பனைக்குண்டு. தொடர்பு: சி. பாலேந்திரன், 28, புதுவீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். [32496]

இரண்டு மாதங்கள் நிரம்பிய நல்ல இன அல்சேஷன் நாய்க்குட்டி ஒன்றும், மீன் தொட்டி ஒன்றும் விற்பனைக்குண்டு. தொடர்பு: கி. இராசதுரை எச்சாலடி சுதுமலை தெற்கு மானிப்பாய். [32498]

மிகவும் நல்ல நிலையில் உள்ள ஒரு சோடி பயனியர் ஸமக் விற்பனைக்குண்டு. சி. நாதன், இல. 16/3, விநாயகர் வீதி, கண்டிக்குளி, யாழ்ப்பாணம். [32511]

சேவல்குஞ்சு விற்பனை

மூன்று கிழமைகள் வளர்ச்சியடைந்த கறுப்பு, பிறவுண் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. "மல்லிகா பதி" சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (32463)

இலகு தோசைமா

"அண்ணா இலகு தோசைமா கலவை, இட்லிமா கலவை" உங்கள் வசதிக்கேற்ப தொகையாகவும், சில்லறையாகவும் எமது கிளைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொகையாகக் கொள்வனவு செய்வோருக்கு விசேட கழிவு வழங்கப்படும். அண்ணா தொழிலகம், இணுவில், யாழ்ப்பாணம், திருநெல்வேலி. (சி-8687)

கார் விற்பனைக்கு

மிகவும் நல்ல ஓடும் நிலையில் உள்ள ஒக்ஸ்போர்ட் கார் பற்றறியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 48/1, முதலாம் ஒழுங்கை (ஐங்கரன் விளையாட்டுக் கழக ஒழுங்கை), பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். [சி-8924]

திருமண சேவை

வெளிநாடு உள்நாடு அரச உத்தியோகம், டாக்டர், என்ஜினியர், அக்கவுண்டன், ஆசிரியர், ஆசிரியை ஜாதகம் எம்மிடம் உண்டு. முழுவிவரங்களுடன் ஜாதகத்துடனும் தொடர்பு கொள்க. "அபிராமி" துர்க்காதேவி தேவஸ்தான வீதி, சாவகச்சேரி. (32412)

உற்சவகால விற்பனை

இந்திய, இலங்கை நாவல்கள் தொகையாகவும், சில்லறைக்கும், சிவம் நீதிக் கதைகள், 1, 2, 3, 4, 5, 6 பாகம் புதியவை. சமய புராணப் புத்தகங்கள், இந்திய சஞ்சிகைகள் விற்று முடிப்பதற்கான மலிவு விலையில் ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர் [சி-8678]

ஜெயா அழகுமாடம்

ஜெயா அழகுமாடம் (ஜெயா பான்சி ஹவுஸ்) எமது ஸ்தாபனத்தின் காட்சியகமும், விற்பனையகமும் நல்லூரில் அமைந்துள்ளது வாடிக்கையாளர்களை அன்புடன் அழைக்கின்றோம். பொருண்மிய மேம்பாட்டுக் கழக காட்சியகத்தின் வடக்கு பக்கமாக அமைந்துள்ளது. (சி-8693)

காவேரி சீயாக்காய்

பேன், சொடுகு, அழுக்கு இல்லாமல் செய்வது காவேரி சீயாக்காய்ப்பவுடர். ஒரு முறை பாவியுங்கள் உண்மையையும் பலனையும் நீங்களே உணர்வீர்கள். சரசாலையில் கிடைக்குமிடம்: ருசி விற்பனை நிலையம், மெய்கண்டான் மத்தி சரசாலை. (32230)

மணிக்கூடுகள் திருத்தல்

சகல மணிக்கூடுகள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள டிஸ்கோ வாச் அன் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (ஆரியகுளம் சந்தி) யாழ்ப்பாணம். கிளைகள்- ஆறுமுக மடம், ஆனைக்கோட்டை. கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-8685)

தவறிவிட்டது

சங்கரப்பிள்ளை காராளசிங்கம் ஆகிய எனது குடும்ப அட்டை நாச்சிமார் கோயிலடிக்கும் பூநாரி மரத்தடிக்கும் இடையில் 19 - 8 - 94 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 1029/3, K.K.S வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்! சன்மானம் வழங்கப்படும். (32501)

சம்பள உயர்வு சுற்றுநிருபம்

யாழ்ப்பாணம், ஓக. 22

அரச ஊழியர்களுக்கு இம்மாதம் முதல் அதிகரிக்கப்பட்ட சம்பளம் வழங்குவது தொடர்பாக பொதுநிர்வாக அமைச்சினால் 29/94 இலக்கம் கொண்ட சுற்றுநிருபம் சகல திணைக்களங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (எ-100)

உ

★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பவ வருடம் ஆவணி மாதம் 08ஆம் திகதி (24-08-1994 புதன்கிழமை திருதியை திதியும், உத்திரட்டாதி நட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தன்று காலை 9-30 முதல் 11-00
★ வரையுள்ள துலா லக்கின சுபமுகூர்த்தத்தில் ★

திரு. திருமதி அ. சிவசுப்பிரமணியம்
அவர்களின்
(ஓய்வுபெற்ற அதிபர்
B. A. லண்டன்)
சிரேஷ்ட புத்திரன்
குமாரதாசன் (குமார்)
(பிரான்ஸ்)
அவர்களுக்கும்

திரு. திருமதி வே. தங்கராசா
அவர்களின்
(ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்
இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்)
புத்திரி
யோகேஸ்வரி (பாபி)
அவர்களுக்கும்

திருவருள் துணை கொண்டு கொழும்பு மயூரபதி அம்மன் தேவஸ்தானத்தில் திருமணம் நடத்த பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டிருப்பதால் அத்தருணம் தாங்கள், தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு
★ அன்புடன் அழைக்கின்றோம். ★

திருமதி ச. சிவசுப்பிரமணியம்,
தமிழகம்,
மல்லாகம்.

திரு. திருமதி வே. தங்கராசா,
"சாரதா இல்லம்",
அல்வாய் வடக்கு,
அல்வாய்.

[32481] (இரு வீட்டார் அழைப்பு)

உ
சிவமயம்

விவாக சோபன விஞ்ஞாபனம்

அன்புடையீர்!

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் மங்களகரமான பவ ஸ்ரீ ஆவணி ஸ்ரீ 8ஆம் (24 - 08 - 1994) புதன்கிழமை உத்திரட்டாதி நட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய சுபதினத்தில் காலை 8 00மணி முதல் 9 40 மணி வரையுள்ள
★ கன்னி லக்கின சுபமுகூர்த்தத்தில் ★
இளங்கலைஞர் மண்டபத்தில், (சட்டநாதர் வீதி)

மயிலணி
காலஞ்சென்ற சி. ஜெகந்நாத சர்மாவின்
புத்திரன் சிரஞ்சீவி
சிவபாதசர்மா (சிவா)
(ஏழாலை புவனேஸ்வரி அம்மன் தேவஸ்தானம்)
அவர்களுக்கு

யோகீஸ்வரக்குருக்கள்
இராஜேஸ்வரி, பத்மா
குடும்பத்தினரின்
கனிஷ்ட புத்திரி சௌபாக்கியவதி
நகுலாம்பிகை (அம்பிகா)
அவர்களை

எல்லாம் வல்ல ஸ்ரீ விநாயக பெருமான் திருவருளை முன்னிட்டு ஸ்ரீ காஞ்சிப் பெரியவரின் ஆசியுடன் கன்னிகாதான மாங்கல்ய தாரண பாணிக்கிரகணஞ் செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் இஷ்ட மித்திர பந்துக்களுடன் வருகை தந்து தம்பதிகளை ஆசீர்வதிக்கும் வண்ணம்
★ அன்புடன் அழைக்கின்றோம். ★

சமாவர்த்தனம்: காலை 4 மணியளவில் மணமகன் இல்லத்தில் நடைபெறும்
வதூவர கிருகப்பிரவேசம்: அன்று மாலை 4மணிக்கு நடைபெறும்

சுபமஸ்து

இங்ஙனம், தங்கள் நல்வரவை விரும்பும்:

ஸ்ரீமதி மீனாட்சியம்மா ஜெகநாதசர்மா,
ஊரெழு.

ச. யோகீஸ்வரக் குருக்கள்.
நல்லூர் மார்க்கட்,
கல்வியங்காடு.

★ இரு வீட்டார் அழைப்பு ★

தனிப்பட்ட அழைப்பிதழ் அனுப்ப முடியாமைக்கு மன்னிக்கவும். (சி-86[illegible])

பருத்தித்துறை

அருள்மிகு சிந்தாயாத்திரை சித்திவிநாயகர் தேவஸ்தானம்

ஏகதின இலட்சார்ச்சனை

இன்று (22 – 08 – 1994) திங்கட்கிழமை சிவஸ்ரீ தா. வாசுதேவக் குருக்கள் தலைமையில் சிறப்பாக நடைபெறும். [7708]

வல்லை நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோயில் வசந்தோற்சவ விழா

23 ‧ 08 ‧ 1994 (செவ்வாய்க்கிழமை)
மாலை **6** மணி

நிகழ்ச்சிகள்

மங்கல இசை

நாதஸ்வரம்
கே. ஆர். சுந்தரமூர்த்தி
(இணுவில் நாதஸ்வரகான கலா ரத்தினம்)
வி. கே. கானமூர்த்தி பஞ்சமூர்த்தி சகோதரர்கள்
(இலசநாத இரட்டையர்கள்)
எஸ். சிதம்பரநாதன்
(இசைஞான பூபதி அருட்கலை திலகம்)
எஸ். கேதீஸ்வரன்

தவில்
கே. நித்தியானந்தம்
(இணுவில் தவில் மேதை)
த. உதயசங்கர்
(தவில் நாதமணி)
என். ஆர். எஸ். ரவீந்திரன்
என். ஆர். எஸ். சுதாகரன்
(தவில் மேதைகள்)
எஸ். ராமதாஸ்
(தவில் வித்துவான்)

பரத நாட்டிய இசை

அரியாலையூர்
செல்வி மைதிலி அம்பலவாணரின் மாணவி
(இராமநாதன் நுண்கலை கல்லூரி போதனாசிரியர்)

பாட்டு
சங்கீத வித்துவான்
சாரதா சச்சிதானந்தம்

நட்டுவாங்கம்
இசைக் கலைமணி
செல்வி மைதிலி அம்பலவாணர்

வயலின்
இசை ஞான பூபதி
ஆர். எஸ். கேசவமூர்த்தி

மிருதங்கம்
சங்கீத கலா வித்தகர்
செல்வன் கே. கண்ணதாஸன்

★ ஒளி
கணபதி மின் அமைப்பாளர் (வல்லை)
★ ஒலி
துரை சவுண்ட் சேவீஸ் (கம்பர்மலை, வல்லை)

– திருவிழா உபயகாரர்.

[32512]

ஒரு தசாப்த நினைவுகளில்

அமரர் நாகமுத்து வல்லிபுரம்

மலர்வு: 03–04–1931
உதிர்வு: 11–09–1984
திதி: 22 – 08 – 1994

அருவமாய் இருந்தும் எம்மை வழிநடத்திச் செல்லும் எங்கள் அன்புத் தந்தையே! இதயக் கமலத்தில் இதழ்தூவி இறைஞ்சுகின்றோம் அஞ்சலியாய்.

உங்கள் மனைவி, பிள்ளைகள்,
மற்றும் நண்பர்கள்.

(7705)

ரயில்வேக்கடவை ஊழியர் சம்பளம்

நாவாலி.ஓக 25

யாழ். மாவட்ட ரயில்வே கடவை ஊழியர்களுக்குரிய ஜூன் மாதத்துக்குரிய சம்பளக் கொடுப்பனவு இன்றும் நாளையும் யாழ். செயலகத்தில் வைத்து வழங்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

நன்றி நவிலல்

நீர்வேலி
அருள்மிகு செல்லக்கதிர்காம ஆலய
பிரதம குரு
சிவஸ்ரீ. கு. தியாகராச சர்மா
(மணி ஐயா) அவர்களுக்கு

19 - 08 - 94 வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஆச்சார்ய அபிடேக விழாவை முன்னின்று நடத்தி வைத்த சிவஸ்ரீ. சுவாமிநாத இராசேந்திரக்குருக்கள் அவர்களுக்கும் இவ்வைபவத்தை முன்னின்று சிறப்பித்த சிவஸ்ரீ. சாம்பசதாசிவ - சோமதேவக் குருக்கள் குடும்பத்தினருக்கும் மற்றும் கதிர்காம ஆலய பரிபாலகர்களுக்கும், காமாட்சி அம்பாள் ஆலய பரிபாலகர்களுக்கும் விழாவில் பங்குபற்றிய உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் யாவருக்கும் எமது மனப்பூர்வமான அன்பு நன்றியறிதல்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

நன்றி!

பிரம்மஸ்ரீ. க. நிரஞ்சன்,
காமாட்சி அம்பாள் தேவஸ்தானம்

(சி-8926)

ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 16 — 09 — 1943
உதிர்வு: 22 — 08 — 1987

திருமதி சிவலோகேஸ்வரி சிவதாசன்

ஆண்டேழு ஆனபோதும் உங்கள் அன்பு நினைவுகள் என்றென்றும் அகலாது நிலைத்திருக்கும். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவன், மகள்,
உற்றார், உறவினர்கள்.

"பிரஷாந்தி",
கோப்பாய் வீதி,
உரும்பிராய்.

(7714)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்

தோற்றம்: 02 — 04 — 1912
மறைவு: 24 — 07 — 1994

அமரர் சபாபதி முருகேசு

எங்கள் இதயத்தின் ஒளிச்சுடராய் ஒளிவீசி எம்மையெல்லாம் அன்போடும், பண்போடும், பாசத்தோடும் அரவணைத்து வளர்த்து கல்விபுகட்டி வாழ வைத்த எம் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

1994 - 07 - 24 அன்று இறைபதமடைந்த எமது அருமைத் தந்தையாரின் மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், பல வழிகளிலும் உதவி செய்த நண்பர்கள், உறவினர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நாளை 1994 - 08 - 23 இல் நடைபெற இருக்கும் அன்னாரின் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கொற்றையூர்.

தகவல்:
Dr. மு. தங்கராசா,
Superintendent
Veterinary Hospital
Jaffna.

மு. சபாரத்தினம்,
D.O.A. Dept. of Construction,
Jaffna.
Visiting Lecturer.
Technical College, Jaffna.

[32479]

நல்லூர் பிரதேச நூலகம்
யாழ்ப்பாணம்

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

வன்செயல்களை தடுக்க முடியுமா?

வழமைப் பிரகாரம், தென்னிலங்கையில் தேர்தலுக்குப் பிந்திய வன்செயல்கள் பரவி வருவதாகச் செய்திகள் வந்துள்ளன. தேர்தல் நடைபெற்ற செவ்வாய்க்கிழமை இரவே, ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டதால் வன்செயல்கள் மூளாமல் தடுக்கப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

எனினும் பிரதான அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களை ஊரடங்குச் சட்டத்தினால் எதுவும் செய்துவிட முடியவில்லை. பொலிஸாராலும் ஆயிரக்கணக்கில் இரவு பகலாகச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள காதுகாப்புப் படையினராலும் வன்செயல்களைத் தடுக்கமுடியவில்லை. பகல்நேர ஊரடங்குச் சட்டத்தின் உதவியோடு கூட தேர்தலுக்குப் பிந்திய அமைதியை நிலைநாட்டுவதற்கு அவர்களால் இயலவில்லை.

தேர்தல் வன்செயல்களில் பிரதான அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களே ஈடுபடுகின்றனர். ஒருவருக்கொருவர் மோதிக் கொள்கின்றனர். தேர்தலில் வென்ற கட்சியின் ஆதரவாளர் தமது கைக்கு அதிகாரம் வந்து விட்டது போன்ற உணர்வில் தோல்வி அடைந்த கட்சி ஆதரவாளர் மீது வன்முறை வைக்கட்டவிழ்த்து விடுகிறார். அல்லது தமது கட்சிக்கு உண்டான வெற்றிக் களிப்பில் அடுத்த கட்சிக்காரரைத் தாக்குகிறார்.

தோல்வியுற்ற கட்சியின் ஆதரவாளர், அதனைச் சகிக்க முடியாது ஆத்திரமுற்று அடுத்த கட்சிக்காரரைத் தாக்குகிறார்.

மோதலில் ஈடுபடுபவர்கள் கட்சிகளின் ஆதரவாளர்களாகவே — சாதாரண பொதுமக்களாகவே — இருப்பினும் அரசியல் தலைவர்கள் ஊட்டிய பகைமை உணர்ச்சியே அதற்குக் காரணமாக அமைகிறது.

அரசியலில் அவரவர் தமது கருத்துக்கும், விருப்பத்திற்கும் ஏற்ப செயற்படுவதற்கு உரித்துடையவர்கள் எனப் பகலை வெளியே சொல்லிக் கொண்டாலும், செயலில் அதற்கு மாறாக நடந்து கொள்ளும் போக்கே அரசியல்வாதிகளிடம் உண்டு. தமது கருத்தையும், கொள்கையையுமே மற்றவர்களும் பின்பற்ற வேண்டும் என்றே அவர்கள் பெரும்பாலும் விரும்புகிறார்கள்.

இந்த "வியாதி" அவர்களைச் சூழவுள்ள ஆதரவாளர்களையும் தொற்றிக் கொள்கிறது. இவ்வியாதி சமூகத்தின் அடிமட்டத்துக்குப் பரவும் போது சகிப்புத் தன்மை குறைந்து அது வன்செயலாக வெடிக்கின்றது.

இதற்குப் புறம்பாக தமது எதிரணியிலவரைப் பழிவாங்கும் நோக்கத்துடன் அரசியல்வாதிகளே தமது அடியாட்களைக் கொண்டு வன்செயல்களைத் தூண்டி விடுவதும் சகஜம். இத்தகைய ஒரு சூழ்நிலையில் தேர்தல் வன்செயல்களில் ஈடுபட வேண்டாம் என்று அரசியல் தலைவர்கள் அறிக்கைகள் வெளியிடுவதோ அல்லது வேண்டுகோள்கள் விடுப்பதாலோ மக்களைத் தடுப்பது இயலாத காரியம். ஊரடங்குச் சட்டத்தின் மத்தியிலும் தேர்தலுக்குப் பிந்திய வன்செயல்கள் வெடித்திருப்பது அதனையே காட்டுகிறது.

அரசியல் தலைவர்கள் தங்கள் சுயநலத்துக்காக மக்களுக்கு அரசியல் பகைமை ஊட்டுவதை நிறுத்தினால் மட்டுமே வன்செயல் இடம் பெறாது தடுக்க முடியும்.

சனநாயகம் என்பது மாற்றுக் கருத்துக்கும் மதிப்பளிப்பது. மக்கள் தமது சொந்த விருப்பப்படி, தங்களுக்குப் பிடித்தமானவர்களைத் தமது பிரதிநிதிகளாக தெரிவு செய்வதற்கு உரித்துடையவர்கள். விளையாட்டுக் களம் போன்றது தேர்தல். வெற்றியையும் தோல்வியையும் சமமாகப் பார்க்கப் பழக வேண்டும் — அரசியல் தலைவர்கள் இவற்றை உணர்ந்து கொண்டு அதற்கேற்ப தாமும் செயற்பட்டு தமது ஆதரவாளர்களுக்கும் புகட்ட வேண்டும். அப்போது தான் அரசியல் மற்றும் தேர்தல் வன்செயல்களைத் தடுக்க முடியும். ஊரடங்குச் சட்டத்தினால் அல்ல!

பொதுமக்கள் குடும்ப அட்டைப் பதிவு
கவனத்தில் கொள்ளவேண்டிய நடைமுறை

பொதுமக்கள் குடும்ப அட்டைப் பதிவு மேற்கொள்ளும்போது கவனத்திற் கொள்ளவேண்டிய குடும்பப் பதிவு சம்பந்தமான நடைமுறைகள் குறித்து போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவின் குடும்ப அட்டைப் பகுதியினர் விடுத்துள்ள அறிவித்தல் இங்கே தரப்படுகின்றது.

(1) புதிய அட்டை பெறுதல்

(அ) காலதாமதமாகப் பதிவோராயின்:

இதுவரை பதியாமல் இருந்து புதிய குடும்ப அட்டை பதிய வருவோராயின் குடும்ப அட்டை பெறாமைக்கான காரணத்தை விண்ணப்பப்படிவத்தில் பூர்த்தி செய்து உரிய முழுமையான விவரங்களோடு கிராம சேவகரின் உறுதிப்படுத்தலுடன் சந்தந்தப் பகுதிக் குடும்ப அட்டை அலுவலகத்தில் ஒப்படைத்தால் புதிய குடும்ப அட்டை ஏழு நாட்களின்பின் வழங்கப்படும். ஒரு குடும்பம் ஒன்றுக்கு மேற்பட்ட அட்டைகள் வைத்திருக்க முடியாது.

(ஆ) புதிதாக வடபகுதிக்குள் வந்தோராயின்:

புதிதாக வடபகுதிக்குள் நுழைந்தவர்கள் மூன்று மாதங்களுக்கு மேல் இங்கே தங்கிச் செல்பவர்களாயின், வடபகுதிக்குள் நுழைவோருக்கான அனுமதிச் சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து, தாம் வசிக்கவுள்ள பகுதிக் கிராம சேவகரின் உறுதிப்படுத்தலுடன் புதிய குடும்ப அட்டைக்கு விண்ணப்பிக்க வேண்டும். இக்குடும்பம் வடபகுதிக்கு வெளியே செல்லும்போது குடும்ப அட்டையைப் பயண அனுமதி வழங்கும் செயலகத்தில் ஒப்படைத்து விட்டுச் செல்ல வேண்டும்.

(இ) வேறு ஒரு குடும்பத்துடன் பதியப்பட்டு இருந்து தற்போது தனியாகப் பதிய விண்ணப்பிப்போர்:

வேறு ஒரு குடும்பத்துடன் பதியப்பட்டு, தற்போது தனியான பதிவிற்கு விண்ணப்பிப்பவர்களுக்கு அவர்களது முன்னைய பதிவு இருந்த குடும்ப அட்டையை எம்மிடம் அனுப்பி அதில் அப்பெயரினை நீக்கஞ்செய்து பின்னர் புதிய குடும்ப அட்டை வழங்கப்படும். உதாரணமாக மருமகன், பெறாமகன், உறவு முறைக்குரியவர் பெயர் நீக்கப்பட்ட பின் அவர்களின் குடும்பத்தவர்களின் குடும்ப அட்டையில் புதிய பதிவு மேற்கொள்ளப்படும். வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்களாயினும், உதவியாளர் எனப்படுவோராயினும் தனிநபர் அட்டை பதிந்து வழங்கப்படும். வயதான தாயார் அல்லது தந்தையார் தமது மணமான பிள்ளைகளுடன் சேர்த்துப் பதிவு வைத்திருக்க முடியாது.

(2) பெயர் நீக்கம்

(அ) இறப்புக் காரணமாக நீக்கம்:

இறப்புக் காரணமாகப் பெயர் நீக்கக்கோரின் கிராம அலுவலரின் சிபார்சு அல்லது இறப்பு அத்தாட்சிப் பத்திரம் இணைத்தால் பெயர் எம்மால் நீக்கப்படும். தனி உறுப்பினர் ஒருவரைக் கொண்ட குடும்ப அட்டையில் அவ்வுறுப்பினர் இறப்பாராயின், அவ்வட்டை கிராம அலுவலரினாலோ அல்லது இறந்தவரது உறவினராலோ அக்குடும்ப அட்டையோ அல்லது அவ்வட்டைக்குரிய இலக்கமோ அப்பகுதிக் குடும்ப அட்டைச் செயலகத்தில் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

(ஆ) தவறுதலாகப் பதியப்பட்ட ஒரு பெயர் நீக்கம்:

வேற்றுக் குடும்ப உறுப்பினர் ஒருவரின் பெயர் தவறுதலாக ஒரு குடும்ப அட்டையில் பதியப்பட்டு இருப்பின் அப்பெயர் நீக்கப்படல் வேண்டும். ஒரு குடும்பத்தின் மணமாகாத உறுப்பினர் மட்டுமே ஓர் அட்டையில் பதிய முடியும்.

1. (இ) இலே குறிப்பிடப்பட்டவாறு நீக்கப்படும் பெயர்களைப் புதிய அட்டையில் பதிந்து கொள்ள முடியும். ஓர் உறுப்பினரின் பெயர் இரு அட்டைகளில் பதியப்பட முடியாது. மிகச் சரியான ஒரு பதிவை விடுத்து மற்றைய பதிவு நீக்கப்பட வேண்டும். பெயர் நீக்க வேண்டி விண்ணப்பிக்கும் போது சான்று அல்லது ஆதாரம் கடிதம் ஆவணமாக எமக்கு விண்ணப்பப்படிவத்துடன் அனுப்ப வேண்டும். அத்துடன் சம்பந்தப்பட்ட குடும்ப அட்டையோ அன்றி அட்டைகளையோ அனுப்பப்படல் வேண்டும். வெறுமனே ஒரு பெயர் எக்காரணம் கொண்டும் நீக்கப்பட முடியாது.

(இ) திருமணம் காரணமாக நீக்கம்:

திருமணம் காரணமாக ஒரு பெயரை நீக்க வேண்டி விண்ணப்பின் திருமணப் பதிவுச் சான்றிதழுடன் விண்ணப்பத்தையும் நீக்க வேண்டிய பெயரையுடைய குடும்ப அட்டையையும் அனுப்ப வேண்டும்.

வெளிநாடுகளில் திருமணம் முடித்தவர்களில் திருமண அத்தாட்சிப் பத்திர மூலப் பிரதி இல்லாதவர்கள் திருமணப் புகைப்படம் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

5 (இ) இல் உள்ளவாறு பெயர் நீக்கப்படும்.

(3) பதிவுகளில் திருத்தம்

(அ) தற்காலிக முகவரி மாற்றம்:-

குடும்ப அட்டையில் பதியப்பட்ட இடத்தில் இருந்து பின்னர் வேறு ஓர் இடத்தில் வசிப்பவர்கள் மீள் தற்காலிக முகவரியில் இரண்டாவது வதிவிடத்தைப் பதிய வேண்டும். தொடர்ச்சியாக ஆறு மாதங்களுக்கு மேல் அவ்விடத்தில் வசிப்போராயின் இரண்டாவது நிரந்தர வதிவிடத்திலேயே புதிய அட்டையைப் பதிந்து பெறவேண்டும் இதற்குக் கிராம அலுவலர் உறுதிப்படுத்திய விண்ணப்பப் படிவத்தைப் பழைய குடும்ப அட்டையுடன் இணைத்து விண்ணப்பிக்க வேண்டும்.

இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்து வசிப்பவர்கள் நிரந்தர முகவரியாகச் சொந்த முகவரியையும் தற்காலிக முகவரியாகத் தற்போதைய முகவரியையும் பதிய வேண்டும். இடம் மாறும்போது மீளவும் தற்காலிக முகவரியிலேயே பதிவு மாற்றத்தை மேற்கொள்ள வேண்டும். இவர்கள் நிரந்தர முகவரியில் மாற்றம் மேற்கொள்ள வேண்டியதில்லை.

(ஆ) குடும்பத் தலைவரின் பெயர் முழுமையான தாக்கல்:-

குடும்பத் தலைவரின் பெயர் குடும்பப் பதிவு அட்டை முன் பகுதியில் முழுமையானதாக இல்லாவிட்டால் அது முழுமையாக்கப்படல் வேண்டும். தகுந்த சான்றுடன் விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து குடும்ப அட்டையை ஒப்படைத்தால் சரியான விவரம் பதியப்பட்ட அட்டை மீள வழங்கப்படும். அட்டையின் பின்பகுதியில் பதியப்படும் பெயர்கள் முழுமையானதாகவும், பூரணமானதாகவும் இருக்க வேண்டும். குடும்பப் பெயர் உள்ளவர்கள் அதனையும் இணைக்க வேண்டும்.

(இ) தொழில், இடம் என்பன புதிதாக சேர்த்தல்:-

இதுவரை குடும்ப அட்டையில் தொழில், தொழில் இடம், என்பன பதியப்படாவிட்டால் பதிவுத் திருத்தத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். வட பகுதிக்கு வெளியேயும், வெளிநாடுகளிலும் வசிப்பவர்கள், வேலை செய்பவர்களும் குடும்ப அட்டையில் அதை வெளிப்படுத்தியிருக்க வேண்டும்.

(4) திருத்தத்துடன் புதிய அட்டை

(அ) குடும்பத் தலைவரின் பெயர் முழுமையாக மாற்றப்பட வேண்டியதாயின்:-

குடும்பத் தலைவரின் பெயர் ஏதேனும் ஒரு காரணத்தால் முழுமையாக மாற்றப்பட வேண்டியதாயின் மாற்றஞ்செய்யப்பட்டு புதிய அட்டை வழங்கப்படும்.

(ஆ) ஆறு மாதங்களுக்கு மேலாக வசித்த ஓர் இடத்தில் குடும்ப அட்டையை மாற்றிக் கொள்ள:-

ஆறு மாதங்களுக்கு மேலாக ஓர் இடத்தில் வசித்திருப்பின் அவ் இடத்துக் கிராம சேவகர் பிரிவு இலக்கத்தில் புதிய அட்டை பெற விண்ணப்பிக்க வேண்டும். 3 (இ) இல் கூறப்பட்டவாறு புதிய அட்டை வழங்கப்படும்.

(இ) பெயர், பிறந்த திகதி, அடையாள அட்டை இலக்கம் என்பவற்றில் தற்போதுள்ள விவரங்களைத் திருத்தஞ்செய்தல்:-

பெயர், பிறந்த திகதி, அடையாள அட்டை இலக்கம் என்பன மாற்றம் செய்யப்பட வேண்டியதாயின் புதிய அட்டை மாற்றத்தின் பின் வழங்கப்படும்.

(ஈ) ஏதேனும் திருத்தத்திற்காக வரும் குடும்ப அட்டை பாவனைக்கு உதவாததாக இருப்பின்:-

திருத்தத்திற்காக வரும் அட்டை தெளிவற்ற எழுத்துக்களுடனோ அன்றிப் பாவனைக்கு உதவாத நிலையிலோ இருப்பின் புதிய அட்டை மாற்றீடாக வழங்கப்படும்.

(உ) அளவற்ற திருத்தங்கள் அட்டையில் இருக்குமாயின்:-

ஏற்கனவே பல திருத்தங்களுக்கு உள்ளான அட்டை மீளவும், திருத்தத்திற்கு எம்மிடம் வரின் புதிய அட்டை மாற்றத்தின் பின் வழங்கப்படும். புதிய அட்டை பதியப்படும்போது வயதுக் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டவர்களினதும், சிறுவர்களினதும் பதிவிற்கு வயதை அல்லது பிறப்புத் திகதியை உறுதிப்படுத்துவதற்குப் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பாடசாலை அதிபரின், வயதை உறுதிப்படுத்தும் கடிதம், ஆவணங்கள் ஏதும் இல்லாதபோது ஏற்றுக் கொள்ளப்படும்.

(5) திருமணம்/ புதிய பதிவு

(அ) மணமக்கள் இருவரின் பெயரும் குடும்ப அட்டையில் பதியப்பட்டிருப்பின்:-

மணமகனின் பெயரும், மணமகளின் பெயரும் இரு சாரரின் குடும்ப அட்டையில் இருப்பின் இரு பகுதிக் குடும்ப அட்டைகளுடன் திருமண அத்தாட்சிப் பத்திரமும் விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து புதிய அட்டைக்கு விண்ணப்பிக்க வேண்டும். வெளிநாடுகளில் திருமணம் முடித்தவர்களில் திருமண அத்தாட்சிப் பத்திர மூலப் பிரதி இல்லாதவர்கள் திருமணப் புகைப்படம் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

(ஆ) மணமக்களில் ஒருவரின் பெயர் ஏதோ ஒரு காரணத்தால் பதியப்படாது இருப்பின்:-

மணமக்களில் ஒருவரின் பெயர் அவரது பெற்றோரினால் பதியப்படாவிட்டால், பதியப்படாத அப் பெயர் பதியப்பட்ட பின்னரே புதிய அட்டைக்கான விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும். 1992 ஆம் ஆண்டு குடும்ப அட்டை வழங்கப்பட்ட பின்னர் மணமானவர்களிற்கே இந் நடைமுறை பொருந்தும்.

(இ) திருமணம் காரணமாக பெயர் நீக்கமட்டும்:-

திருமணம் காரணமாகப் பெயர் நீக்கமட்டும் விண்ணப்பிப்பவர்கள் அதற்கான திருமணப் பதிவுச் சான்றுடன் விண்ணப்பிக்க வேண்டும். பெயர் நீக்க வேண்டிய குடும்ப அட்டையையும், திருமணப் பதிவுச் சான்றிதழையும் இணைத்து விண்ணப்பப் படிவத்துடன் விண்ணப்பிக்க வேண்டும்.

(6) பிறப்புப் பெயர் சேர்ப்பு

(அ) பிறப்புக்களைச் சேர்த்தல்:-

பிறப்புக்களைப் பதியும் போது பிறப்புச் சான்றிதழோடு விண்ணப்பத்தைக் கிராம சேவகரின் உறுதிப்படுத்தலுடன் அனுப்பி, அட்டையில் பெயரைச் சேர்க்க வேண்டும்.

(ஆ) தத்து எடுத்த குழந்தைகளைச் சேர்த்தல்:-

தத்து எடுத்த குழந்தைகளைப் பதிவதாயின் தத்து எடுத்த சான்றுக்கான ஆவணத்துடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் பெற்றோரின் பெயர் மாற்றம் சம்பந்தமான சான்றையும் இணைத்து விண்ணப்பித்தால் பிள்ளையின் பெயர் முன்னர் பதியப்பட்ட அட்டையில் இருந்து நீக்கப்பட்டுத் தத்து எடுத்த பெற்றோரின் அட்டையில் பெயர் சேர்க்கப்படும்.

(7) பிரதி அட்டை

(அ) தவறவிடப்பட்ட அட்டைக்கான பிரதி அட்டை பெறல்:-

ஏற்கனவே குடும்பப் பதிவு அட்டை பெற்று அவ் அட்டையினைத் தவறவிட்டவர்கள், அக் குடும்ப அட்டைக்குரிய இலக்கத்துடன் கிராம சேவையாளரின் உறுதிப்படுத்தல் கடிதத்துடனும் குடும்ப அட்டை தவறவிடப்பட்ட காரணத்தினையும் முன்பு தவறவிடப்பட்ட குடும்ப அட்டையில் நீக்கப்படாத பயண அனுமதி விவரம், பிணை விவரங்கள் இருந்தால் அவ் விவரத்துடன் குடும்பத் தலைவரினால் எழுதப்பட்ட கடிதத்தினையும் இணைத்து விண்ணப்பித்தால் முன்பு தவறவிடப்பட்ட குடும்ப அட்டையில் உள்ள விவரங்களுடன் எம்மால் பிரதி அட்டை வழங்கப்படும். வழங்கப்பட்ட பிரதி அட்டையில் தற்போது ஏதேனும் மாற்றம் இருப்பின் பின்பு இப் பிரதி அட்டையுடன் திருத்திப் புதிய அட்டைக்கு விண்ணப்பித்தல்வேண்டும்.

(ஆ) சேதமடைந்த அட்டைகளை வைத்திருப்பவர்களும், பயண அனுமதி, பிணை விவரங்கள் எழுதி முடிவடைந்த குடும்ப அட்டை வைத்திருப்பவர்களும் அவ் அட்டைகளுடன் விண்ணப்பித்தால் பிரதி அட்டை வழங்கப்படும்.

(8) வெளிமாவட்டப் பதிவு

(அ) தென்தமிழ் முத்தைச் சேர்ந்தவர்கள் இங்கு வசிப்பவர்களாயின் வெளி மாவட்டப் பதிவு மேற் கொள்ளப்படும்.

(ஆ) வன்னி பெருநிலப் பரப்பைச் சேர்ந்தவர்கள் குடும்பமாக யாழ். வ மாவட்டத்தில் ஆறு மாதத்திற்கு மேல் வசித்தவர்களாயின் நிரந்தர முகவரியாக யாழ். மாவட்ட வதிவிடமே பதியப்படும்.

(இ) 1992-6ஆம் மாதத்தில் இருந்து வன்னி பெரு நிலப்பரப்புப் பகுதியில் குடும்ப அட்டை வழங்கப்பட்டுள்ளதால் இக்காலப் பகுதியின் பின் குடும்பமாக வந்த வர்களிடம் அந்த மாவட்டத்திற்குரிய குடும்ப அட்டையோ அன்றிக் கிராம அலுவலரின் கடிதமோ கோரப்படும். இவற்றைச் சமர்ப்பித்தால் மட்டுமே யாழ். மாவட்டத்தில் குடும்ப அட்டை வழங்கப்படும். அது யாழ். மாவட்டக் குடும்ப அட்டையாகவே இருக்கும். மொத்தத்திற்கு மேல் தொடர்ச்சியாக ஓர் இடத்தில் வசித்தால் மட்டுமே அவ்விடத்துக் கிராம சேவகரின் உறுதிப்படுத்தலுடன் மேற்கண்ட நடைமுறைக்கமைய அட்டை வழங்கப்படும்.

(ஈ) தென்தமிழ் முத்தைச் சேர்ந்தவர்கள் தாம் தற்போது வசிக்கும் கிராம சேவகரிடத்தில் விண்ணப்பத்தை உறுதி செய்து வெளி மாவட்டக் குடும்ப அட்டையைப் பெற வேண்டும். நிரந்தர முகவரியில் வெளி மாவட்ட வதிவிடத்தைப் பதிந்து, தற்காலிக முகவரியில் தற்போதைய முகவரியைப் பதிய வேண்டும்.

(9) தனிநபர் அட்டைப் பதிவு

(அ) கிறிஸ்தவ பாதிரிமார்கள், கன்னியாஸ்திரிகளுக்கானது:-

பாதிரிமார்கள் கன்னியாஸ்திரிமார்கள் உத்தியோக பூர்வமாக மேலதிகாரியின் கடிதத்துடனும், கிராம சேவகரின் உறுதிப்படுத்தலுடனும் விண்ணப்பித்துத் தனிநபர் அட்டைகளைப் பெறலாம். முன்னர் தவறுதலாகக் குடும்ப அட்டை பெற்றவர்கள் அவற்றைச் சமர்ப்பித்துத் தனிநபர் அட்டை பெற்றுக் கொள்ள வேண்டும்.

(ஆ) யாழ். பல்கலைக்கழக வெளி மாவட்ட மாணவர்களுக்கானது:-

யாழ். பல்கலைக்கழகத்தில் பயிலும் வெளி மாவட்ட மாணவர்கள் சம்பந்தப்பட்ட மாணவர் ஒன்றிய அத்தாட்சிக் கடிதத்துடனும், கிராம சேவகரின் உறுதிப்படுத்தலுடனும் தனிநபர் அட்டையைப் பதிந்து பெறல் வேண்டும்.

(இ) யாழ். பாடசாலைகளில் பயிலும் வெளிமாவட்ட மாணவர்களுக்கானது:-

குடும்பமாக அன்றி தனியாக யாழ். மாவட்டத்தில் பாடசாலைகளில் கல்வி பயிலும் வெளி மாவட்ட மாணவர்கள் தனிநபர் அட்டை பதிதல் வேண்டும். கல்லூரி அதிபரின் சிபார்சுக் கடிதத்துடனும், கிராம சேவகரின் உறுதிப்படுத்தலுடனும் இதைப் பதியலாம்.

(ஈ) தொழில் நிமித்தம் தங்கியுள்ள வெளி மாவட்டத்தவராயின்:-

தொழில் நிமித்தம் யாழ். மாவட்டத்தில் தங்கியுள்ள வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் அத்தாட்சிக் கடிதத்துடனும் கிராம சேவகரின் உறுதிப்படுத்தலுடனும் விண்ணப்பிக்க வேண்டும். இவர்களுக்கான தனிநபர் அட்டை எமது பரிசீலனையின் பின் வழங்கப்படும். (குடும்பமாக இங்கு தங்கியுள்ளோராயின் இந் நடைமுறை பொருந்தமாட்டாது.)

மேற் குறிப்பிட்ட நடைமுறைகளின்படி குடும்ப அட்டை திருத்தங்கள் செய்வதற்கு விண்ணப்பிக்கலாம் என்பதை போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் குடும்ப அட்டை பகுதியினர் பொதுமக்களுக்கு அறியத்தருவதுடன் மேலதிக விவரங்களுக்கு அந்த அந்தப் பகுதிக்கு என இருக்கும் குடும்ப அட்டை செயலகத்துடன் வார நாட்களில் காலை 8-30 மணி தொடக்கம் நண்பகல் 12-30 மணி வரையும் பிற்பகல் 1-30 மணி தொடக்கம் 3-30 மணி வரையும், சனிக்கிழமைகளில் காலை 8-30 மணி தொடக்கம் நண்பகல் 1-00 மணி வரையும் தொடர்பு கொள்ளலாம் என்பதையும் அறியத்தருகின்றனர்.

★

நல்லூர் ஆலயச் சூழலில் இன்று நடக்கும் நிகழ்வுகள்

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தை ஒட்டி பதினாராம் நாளான இன்று ஆலயச்சுற்றாடலில் நடைபெறும் நிகழ்ச்சிகள் வருமாறு:

நாவலர் மணிமண்டப முன்றிலில் தெய்வீக இசையரங்கு

மாலை 6 — 7 மணி வரை நந்தினி- ராமலிங்கம் இசைக்கச்சேரி, மாலை 7 — 8 - 30 மணிவரை எஸ். பாலசிங்கம் இசைக்கச்சேரி.

நல்லை ஆதீனத்தில்

காலை 9 - 30 மணிக்கு சமய தீட்சை

மாலை 2 - 00 மணிக்கு சமயப் பேருரை

மாலை 3 - 00 மணிக்கு புராணப்படிப்பு

மாலை 4 - 00 மணி முதல் சோதிட ஆய்வரங்கு

இரவு 6 — 7 மணி வரை பிரசங்கபூஷணம் நடேசன் சிவசண்முக மூர்த்தியின் கந்தரனுபூதி இசைப்பேருரை.

மேற்கு வீதியில் உள்ள ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலயத்தில்

மாலை 5 - 30 மணிக்கு சம்பூரணராமாயணம் தெய்வீக இசைப்பேருரை "கண்டேன் சீதையை" தலைப்பில் பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா.

(க-30-111)

புலிகளின் குரல் வானொலியில்

திங்கள் இரவு
22 — 08 — 1994

★ 8-01 — தளிர்கள் — சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
★ 8-20 — செய்திச்சரம்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — தரிசனம்

செவ்வாய் காலை
23 — 08 — 1994

★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — இன்றைய தாரகை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — தாயகப் பாடல்கள்

இன்று

நல்லூர் ஸ்ரீராகவேந்திர சுவாமிகள் பிருந்தாவனப் பிரவேச விழா இறுதிதினமாகிய இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3-30 மணியளவில் அபிஷேகமும் ஆராதனையும் நடைபெறும். தொடர்ந்து பஜனை, ஸ்ரீராகவேந்திராமிர்தம் நூல் வெளியீடு. சங்கீத பூஷணம் எம். திலகநாயகம் போலின் பாட்டு ஆகியன இடம் பெறும்.

தேர் வெள்ளோட்டம்

மீசாலை வடக்கு இராமாவில் கந்தசாமி ஆலயத்தில் சுமார் இருபது லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இரண்டு சித்திரத்தேர்களின் வெள்ளோட்ட விழா இன்று திங்கட்கிழமை நடைபெறும்.

(ஓ-117)

மெய்வல்லுநர் வீடியோபடம்

யாழ்ப்பாணம், ஓக. 21

மெய்வல்லுநர் பயிற்சி தொடர்பான இசைவீடியோ படக்காட்சி ஒன்றை யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம் ஒழுங்குசெய்துள்ளது. நாளை மறுநாள் புதன்கிழமை மாலை 4 மணி முதல்யாழ். கச்சேரி பழைய உள்ளவை.எம்.சி.ஏ. மண்டபத்தில் இடம் பெறவிருக்கும் இந்த வீடியோபடக் காட்சியை மெய்வல்லுநர் துறையில் ஈடுபாடுள்ள அனைவரும் பார்த்துப் பயன் பெற முடியும்.

(எ)

பயிற்சி வகுப்பு

மயிலணி,ஓக, 22

மருதனாரமடம் தொழிற்கல்வி நிலையத்தின் சகல முதலாம்,இரண்டாம் வருடப் பயிலுநர்களையும் ஆங்கிலக் கற்கைநெறியினரையும் இன்று திங்கட்கிழமை முதல் இடம் பெறும் இறுதிக் கற்பித்தல் தொடர்பான அறிவுறுத்தல்களுக்கும் பயிற்சிக்கும் தவறாது சமுகந் தரும்படி சிரேஷ்ட போதனாசிரியர் அறிவிக்கின்றார். (க-89)

சுகாதாரத்தொண்டர் பயிற்சி வகுப்பு

நீர்வேலி,ஓக, 22

நீர்வேலியைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் பங்கு பற்றும் ஆறு நாள் சுகாதாரத் தொண்டர் பயிற்சி வகுப்பு இன்று திங்கள் ஆரம்பமாகிறது. இப்பயிற்சி வகுப்பை நீர்வேலி சுகாதாரக் குழு ஏற்பாடு செய்துள்ளது.

(எ-110)

ஓகஸ்ட் சம்பளம் வழங்கப்படும்

சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கான ஓகஸ்ட் மாதச் சம்பளம் நாளையும் நாளை மறுநாளும் யாழ்ப்பாணம் வர்த்தக வங்கியில் வைத்து காலை 9 மணியில் இருந்து நண்பகல் 12 மணி வரை வழங்கப்படவிருப்பதாக கூட்டுத்தாபனக் கணக்காளர் அறிவித்துள்ளார். [எ]

நாய்களுக்கு தடுப்பூசி

நீர்வேலிக் கிராமப்பிரதேசத்திலுள்ள வீட்டு வளர்ப்பு நாய்களுக்கு இன்றும் நாளையும், நாளைமறுதினமும் தடுப்பூசி போடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நல்லூர் உற்சவகாலச் சிறப்பம்சம்

ஆறுமுகனே அருள் தருவாய்!

நாடும் நகரும் அமைதி பெற
நல்லூர்க் கந்தா கருணை செய்வாய்
வீடும் வாழ்வும் நிறைவு பெற
வீரவேலா வினை அறுப்பாய்
தேடும் இன்பம் மலர்ந்து மணந்திட
தேவர் தலைவா துணைபுரிவாய்
ஆடும் மயில் மீதேறி வரும்
ஆறுமுகனே! அருள் தருவாய்!!

ஒட்டுமடம் க. அருமைநாயகம்.

யாழ். தேர்தலை..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டணி சார்பிலும், யாழ். வாக்காளர் ஒருவராலும் நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டது தெரிந்ததே.

இந்த மனுக்களை விசாரித்த மேன்முறையீட்டு நீதிமன்றம் —

தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளை தேர்தல் ஆணையாளர் ஆரம்பித்து விட்டால் தேர்தல் முடிவடையும் வரை அந்த நடவடிக்கைகளில் நீதிமன்றம் தலையிட முடியாது என்று தெரிந்தும் —

மேற்படி மனுக்களில் சம்பந்தப்பட்ட தேர்தல்களில் போட்டியிடும் ஏனைய கட்சிகள் மற்றும் குழுக்களைச் சேர்ந்தோரை பிரதிவாதிகளாகக் குறிப்பிடாததைச் சுட்டிக் காட்டியும் —

மனுக்களைத் தள்ளுபடி செய்திருந்தது.

தற்போது தேர்தல் தொடர்பான தேர்தல் ஆணையாளரின் நடவடிக்கைகள் முற்றுப் பெற்று விட்டதாலும் —

யாழ். தேர்தல் செல்லுபடியற்றது என வாதிடுவதற்கு யாழ். தேர்தல் வாக்களிப்பு தொடர்பான புள்ளி விவரங்களில் பல அம்சங்கள் இருப்பதாலும் —

யாழ். தேர்தலை ஆட்சேபித்து நீதிமன்றத்தில் மீண்டும் மனுச் செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

அப்படி மனுச் செய்யப்பட்டு அந்த மனுவை நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்று —

யாழ். மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட பத்து எம். பிக்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகச் செயற்படுவதற்கு இடைக்காலத் தடை விதித்தால் —

அது நாடாளுமன்றத்தில் தற்போது தமிழ்க்கட்சிகளுக்கு உள்ள செல்வாக்கைப் பறித்து விடும் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்தால் மனுமீதான விசாரணை முடியும் வரை — அது ஒன்றிரண்டு ஆண்டுகள் கூடச் செல்லலாம் — யாழ். மாவட்ட எம். பிக்கள் பத்துப் பேரும் நாடாளுமன்றம் செல்ல முடியாது.

இதனால் ஈ.பி.டி.பியினர் ஒன்பது எம். பிக்களையும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினர் ஓர் எம். பியையும் இழப்பர்.

நாடாளுமன்றத்தில் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையும் 225 இல் இருந்து 215 ஆகக் குறையும்.

அத்தகைய சந்தர்ப்பத்தில் ஒரு கட்சி அல்லது கூட்டணி தனித்து ஆட்சியமைக்கத் தேவைப்படும் எம். பிக்களின் எண்ணிக்கையும் 113 இலிருந்து 108 ஆகக் குறைந்துவிடும்.

தற்போது 105 ஆசனங்களை வைத்திருக்கும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி — யாழ். மாவட்டத்தில் ஓர் எம். பியை இழந்த நிலையில் 6 எம். பிக்களை வைத்திருக்கும் முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து பலமான அரசை அமைக்கக் கூடியதாக இருக்கும்

அத்தகைய சந்தர்ப்பத்தில் மலையக மக்கள் முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட் ஆகிய எந்தத் தமிழ்க் கட்சியின் ஆதரவும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்குத் தேவைப்படாது.

ஆகவே நாடாளுமன்றத்தில் தமிழ்க் கட்சிகளின் செல்வாக்கைப் பாதிப்பதாகவே இந்த முயற்சி அமைந்துவிடும்.

மறுபுறத்தில் —

யாழ் தேர்தலுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்து அதில் வென்றாலும்கூட —

தற்போதைய நிலையில் சட்டத்துக்கு அமைவான முறையில் யாழ்ப்பாணத்தில் மறுதேர்தல் நடத்தவோ அல்லது புதிய எம். பிக்களைத் தெரிவு செய்யவோ வாய்ப்புக் கிடைக்கப் போவதில்லை.

இத்தகைய சந்தர்ப்பத்தில் யாழ் தேர்தலுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வது — ஈ.பி.டி.பியினரை நாடாளுமன்றத்திலிருந்து வெளியேற்ற உதவினாலும் —

ஏனைய தமிழ் எம்.பிக்களின் செல்வாக்கைப் பறித்து பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் கையைப் பலப்படுத்துவதாக அமைந்துவிடும்; அத்துடன் தமிழ் எம்.பிக்கள் தமது உரிமைகளுக்காக பேரம் பேசக்கூடிய நிலையிலிருந்து விலகிவிடும்.

எனவே தற்போது நாடாளுமன்றத்தில் உள்ள தமிழ்க் கட்சிகள் மேற்படி தேர்தல் முடிவுக்கு எதிராக நீதிமன்றம் செல்லத் தயக்கம் காட்டும் என்றும் —

ஈ.பி.ஆர்.எல்.எவ் போன்ற அமைப்புகள் நீதிமன்றம் செல்ல முயலக்கூடும் என்றும் அவதானிகள் சுட்டிக் காட்டினர். (உ)

தீர்வு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் —

நான் எந்தக்கட்டத்திலும் அரசியலை விட்டு வெளியேறுவேன் என்று கூறவில்லை என்று ரணில் தெரிவித்தார்.

தற்போது பதவி ஏற்றுள்ள அரசாங்கம் நீண்ட நாள் நிலைக்காது தொடர்ந்து நீடிக்கும் என நான் நினைக்கவில்லை — அடுத்தமுறை நாம் வெற்றிபெற்று அரசாங்கத்தை அமைப்போம் —

எனக்கு கிடைத்த இந்த நேரத்தில் சில புத்தகங்களை வாசிக்க திட்டமிட்டுள்ளேன் — என்றும் அவர் சொன்னார். (உ-எ-3)

ஜனாதிபதி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி]

தங்காவுக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கை என்றும் —

அதனால் —

ஜனாதிபதித் தேர்தல் வரை பொ. ஐ. மு அரசுக்கும் தனக்கும் இடையில் சர்ச்சைகள் மூளாத வகையில் ஜனாதிபதி விஜேதுங்கா செயற்படுவார் என்று அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டனர். (உ-எ-3)

அதிமேற்றிராணியாருடன் சந்திரிகா நேற்றுப் பேச்சு

இனப்பிரச்சினை பற்றியும் ஆராய்வு

பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா நேற்று கொழும்பு ஆயர் இல்லத்துக்குச் சென்று அதிமேற்றிராணியார் அதி. வண. நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோவை சந்தித்தார். துணை மேற்றிராணியார் வண. ஒஸ்வால்ட் கோமிஸ், ஆயர் ரஞ்சித் மல்கம் ஆகியோரும் அப்போது அங்கு சமுகமளித்திருந்தனர்.

நாட்டின் சமூக பொருளாதார நிலைமைகள், அரசியல் கல்வி, சமூக ஒருங்கிணைப்பு போன்ற விடயங்கள் குறித்து பிரதமர் கத்தோலிக்க மதத் தலைவர்களுடன் உரையாடினார்.

இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணும் விடயமும் உரையாடலில் முக்கிய இடத்தைப் பெற்றது.

மீனவர் சமூகத்தினர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆயர் ரஞ்சித் மல்கம் எடுத்துக் கூறினார்.

இயன்றளவு விரைவில் அவர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்று பிரதமர் உறுதியளித்தார்.

கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் சி. வீ. குணரத்தினாவும் பிரதமருடன் கூடச் சென்றிருந்தார். (உ-ஐ-3)

நாடாளுமன்றத்தில் கூட்டணி தனிக்குழுவாக செயற்படும்

பொ.ஐ.மு. அரசை நாம் முழுமையாக ஆதரிப்போம் என்ற நிலைப்பாடு இல்லை. எதிர்க்கட்சியில் தனிக்குழுவாக இயங்க முடிவு செய்துள்ளோம் ''

ஆதேவேளை தமிழர் பிரச்சினைகளைத் தீர்க்க — தமிழரின் அபிலாசைகளை நிறைவேற்றும் ஏற்பாட்டை — அரசு செய்ய முயற்சிக்குமாயின் அந்தச் சந்தர்ப்பத்தில் நாம் அரசை ஆதரிப்போம்.

— இவ்வாறு கூறினார் மட்டக்களப்பு மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பியான ஜோசப் பரராஜசிங்கம் பி.பி.சிக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இப்படிக் கூறினார்.

கந்தப்பளையில் புதனன்று 17 கடைகள் எரிந்து நாசம்

கொழும்பு, ஓ. 22

பொது தேர்தலுக்கு அடுத்த நாள் புதன்கிழமை அதிகாலை 2 மணிக்கு நுவரெலியா சந்தப்பளை நகரில் ஏற்பட்ட தீவைப்புச் சம்பவத்தில் 17 கடைகள் எரிந்துநாசமாகின.

இத் தீவிபத்து காரணமாக பாதிக்கப்பட்டவர்களில் சுமார் 83 பேர் சந்தப்பளை மெதடிஸ் 5 தமிழ் மகாவித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

வாக்களிப்பைத் தொடர்ந்து தென் பகுதியில் அரசியல் கட்சிகளுக்கிடையே ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களில் ஒன்றாகவே இத் தீவைப்புச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

பிரேமா கொலை குறித்து விசாரிக்க ஆணைக்குழு

புதிய பிரதமர் சந்திரிகா முடிவு

கொழும்பு, ஓ. 22

மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸாவின் கொலை குறித்த விசாரணை நடத்த ஆணைக்குழு ஒன்றை நியமிப்பதற்கு புதிய பிரதமர் சந்திரிகா முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இதற்காக சந்திரிகாவுக்கு எங்கள் குடும்பம் என்றென்றும் கடமைப்பட்டிருக்கும் என நேற்று திருமதி ஹேமா பிரேமதாஸா விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

ஆணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கையை நான் முந்திய ஐ.தே.க. அரசுக்கு விடுத்திருந்தேன். ஏதோ தெரியாத, புரியாத காரணங்களுக்காக அக் கோரிக்கை கவனிக்கப் படவில்லை. புதிய பிரதமர் இக் கோரிக்கை குறித்து தந்த உறுதி மொழிக்காக எனதும் எனது இரு பிள்ளைகளினதும் ஆசிகள் அவருக்கு உரியனவாகுக.— என்றும் ஹேமா அவ்வறிக்கையில் தெரிவித்திருக்கிறார். (உ-எ-6)

ஈ.பி.டி.பி -...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் அவர்களைக் கப்பலில் ஏற்ற முற்பட்டனர் என்றும்

அச்சமயம் அங்கு நின்ற கடற்படையினர் அவர்களைத் தடுத்து சம்பந்தப்பட்ட பயணிகளை கப்பலில் ஏற்ற மறுத்துவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் துறைமுகப் பகுதியில் நடமாடவும் படையினர் தடைவிதித்ததாகவும் அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இச்சம்பவத்தைத் தொடர்ந்தே இருதரப்பினருக்கிடையேயும் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

புகைப்படங்கள் சேகரிப்பு

இதற்கிடையில் —

திருமலையில் செயற்படும் ஈ.பி.டி.பி உறுப்பினர்களின் புகைப்படங்களை உடன் சேகரிக்குமாறு திருமலையில் உள்ள பொலிஸ் உயர் அதிகாரிக்கு கொழும்பிலிருந்து உத்தரவிடப்பட்டிருப்பதாக அறியவந்தது.

ஆயுதக்குழுக்களின் செயற்பாட்டைக் கட்டுப்படுத்த புதிய அரசு மேற்கொள்ளும் முதல் நடவடிக்கையாக இது இருக்கலாம் எனக் கருதப்படுகிறது [ஐ-3]

ஐ.தே.க ...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதே வேளை நாளை மறுதினம் புதன்கிழமை நடைபெறவுள்ள கூட்டத்தில் ஐ.தே.க. நாடாளுமன்றக் குழுவின் தலைவர் தெரிவுசெய்யப்படவிருக்கிறார்.

இப்பதவிக்கு முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் காமினி திஸநாயக்காவும் போட்டியிடவிருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

குழுவின் தலைவராக தெரிவு செய்யப்படுபவரே எதிர்க்கட்சித் தலைவராக சபாநாயகரால் நியமிக்கப்படுவார்.

கட்சியின் நாடாளுமன்றக் குழுவின் தலைமைக்கும் கட்சித் தலைமைக்கும் தம்மை போட்டியிடும்படி கட்சியின் மூத்த தலைவர்களும் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட எம். [illegible] காமினி [illegible] கேட்டிருக்கிறார்.

'சுகவாழ்வு'

யாழ்ப்பாணம், ஓ. 20

யாழ் மாநகர சுகாதாரப் பிரிவினர் நல்லூர் இந்து விடுதியில் "சுகவாழ்வு" கண்காட்சியை ஆரம்பித்தனர். (ஒ-17)

அரசுக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் —

இதன் காரணமாகவே புதிய அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்குவதன் மூலம் அச்சலுகைகளைத் தொடர்ந்து அனுபவிக்க ஈ.பி.டி.பி. குழு முயற்சித்து வருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இம்முயற்சி தோல்வியுற்றால் ஈ.பி.டி.பி. நிர்க்கதிக்குள்ளாகும் நிலைமை உருவாகும் என்றும் —

அதனைத் தவிர்க்கவே ஈ.பி.டி.பி. பகீரதப் பிரயத்தனம் செய்து வருகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

ஆனால் —

எடுத்த எடுப்பில் ஈ.பி.டி.பியின் ஆதரவை ஏற்றுக்கொள்வதற்கு பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைமை தயக்கம் காட்டுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஈ.பி.டி.பி. ஒரு யுத்தக் குழுவின் தோற்றத்தைக் கொண்டிருப்பதும்.

சந்திரிகாவைக் கொலை செய்ய முயற்சித்ததாக அக்குழு மீது குற்றஞ்சுமத்தப்பட்டிருந்ததுமே இத்தயக்கத்துக்குக் காரணம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ-6)

சந்திரிகாவுக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விட்ட அறிக்கை ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.

பெருந்தோட்டத்துறை தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உதவும் முன்னேற்றகரமான அரசியல் கொள்கைகளுக்கு இ. தொ. கா. எப்பொழுதுமே மனப்பூர்வமான ஆதரவை வழங்கி வந்துள்ளது.

அரசியல் அதிகாரம் பொ. ஐ. முன்னணிக்கு கைமாறப்பட்டு பெரும்பான்மை மக்களின் விருப்பத்துக்குரிய அரசாங்கம் உருவாக்கப்படுவதற்கு சுமுகமான சிறந்த சூழ்நிலையை உருவாக்கியதற்காக ஐ.தே. கட்சிக்கும், முன்னாள் பிரதம மந்திரிக்கும் இ.தொ. கா. அதன் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

— இவ்வாறு அந்த அறிக்கையில் திரு தொண்டமான் மேலும் தெரிவித்துள்ளார்.

பொ.ஐ.மு. அரசின் பக்கம் இ. தொ. கா. சேரும் சாயல் இந்த அறிக்கையில் காணப்படுவதாக பி.பி.ஸியின் சிங்களச் செய்தியாளர் எல்மோ பெர்னாண்டோ கருத்து வெளியிட்டிருக்கிறார்.

தமது அறிக்கைக்கு பொ. ஐ. மு ஆக காட்டும் பிரதிபலிப்பை தொண்டமான் எதிர்பார்ப்பதாகத் தெரிகிறது என்றும் அவர் குறிப்பிட்டார். (உ-எ-6)

அரசு....

(1 ஆம் பக்க தொடர்ச்சி)

அடுத்த சில மாதங்களில் அரசும் எதிர்க்கட்சியும் கருத்து உடன்பாட்டுடன் கூடிய தீர்வை காணவேண்டும்என்று நாம் கோருகின்றோம்.

நெருக்கடியான இக்கட்டத்தில் ஜனாதிபதி எந்த ஓர் அரசியல் கட்சியின் நலன் கருதியும் செயற்படக் கூடாது. நாட்டினதும் மக்களினதும் பாதுகாப்புக்கு முன்னுரிமை கொடுத்து அவர் செயற்பட வேண்டும் —

இவ்வாறு அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் கையொப்பமிட்டுள்ளவர்கள் விபரம் வருமாறு;-

வண. மாபலகம விபுலசார தேரர், வண. மதுமவஜிரஞாண தேரர் தேசிய கிறிஸ்தவ சபைத் தலைவரும் அங்கிலிக்கன் ஆயருமான வண. கென்னத் பெர்னாண்டோ, சமூக-மத நிலைய இயக்குனர் வண. பிதா திஸ்ஸ பாலசூரியா, வண. பிதா ஓஸ்கார் அபயரத்ன. தேசிய கிறிஸ்தவ சபைப் பொதுச் செயலாளர் வண. பிதா நீல்ஸி பெரேரா, சமூக, பொருளாதார வளர்ச்சி நிலைய இயக்குநர் பிதா ஒஸ்வல்ட் போத் சர்வோதய தலைவர் ஏ.ரி. ஆரியரத்ன, மார்கா நிறுவன உபதலைவர் கோட்பிறே குணதிலக, சமய, சமாதானத்துக்கான உலக மாநாட்டின் செயலாளர் நாயகம் எம். மஸாகம் முனைதீன், மதங்களுக்கு இடையேயான பிரதான குழுவின் இணைப்பாளர் திரு ஜோர் விக்லியம், பெண்கள் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிலைய பணிப்பாளர் [illegible] ஸில்வா.

(உ-எ)

மங்கள முனசிங்காவும் தேர்தலில் தோல்வி!

கொழும்பு, ஓ. 22

முன்னைய நாடாளுமன்றத்தினால் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவராக இருந்த மங்கள முனசிங்காவும் நடந்த பொதுத் தேர்தலில் படுதோல்வி கண்டுள்ளார்.

களுத்துறை மாவட்டத்தில் போட்டியிட்ட நெவில் பெர்னாண்டோவும் தோல்வியடைந்தார்.

கடந்த ஆட்சியில் அமைச்சர்களாக இருந்த ஏ. ஆர். மன்சூர், விமல் விக்ரமசிங்க, எம். எச். எம். அபூசாலி ஆகியோரும் இத்தேர்தலில் தோல்வியடைந்துள்ளனர். (உ-3)

விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். றெட்டாக் கழகம் எஸ். எம். பெர்னாண்டோ நிறுவன ஆதரவில் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ். பல்கலைக் கழக மைதானத்தில் இன்று (திங்கள்) பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் பாஷையூர் சென். அன்ரனீஸ் அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றீஸ் அணி மோதும்.

★ ★ ★

நீர்வேலி காமாட்சியம்பாள் சனசமூக நிலையத்தின் 44 ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி கடந்த சனிக்கிழமை முதல் மின்னொளியில் நடைபெற்று வரும் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் (ஓவர்) இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ பிற்பகல் 5 மணி— வரணி இளைஞர் வி. க அணி எதிர் சிறுப்பிட்டி ஜனசக்தி வி. க. அணி.

பிற்பகல் 5.30 — வரணி மதி ஒளி வி. க. அணி எதிர் புத்தூர் கலைமதி வி. க. 'இ' அணி.

★ நீர்வேலி மத்திய வி. க. அணி எதிர் சிறுப்பிட்டி ஜனசக்தி வி. க. 'ஏ' அணி.

(ஐ-110)

★ ★ ★

யாழ். உதைபந்தாட்டச் சங்கமும், வலி கிழக்கு உதைபந்தாட்டச் சங்கமும் இணைந்து நடத்தும் 'தொக்கவுட்' உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி கடந்த வெள்ளியன்று ஆரம்பமானது. அந்தச் சுற்றுப் போட்டியில் சென். அன்ரனீஸ் மைதானத்தில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களின் விபரம் வருமாறு:-

★ பிற்பகல் 4 மணி — ஈச்சமோட்டை அணி எதிர் உதயசூரியன் அணி.

★ பிற்பகல் 5 மணி — வைக்கிங்ஸ் அணி எதிர் பொற்பதி அணி. (ஐ)

இணுவில் வாசி பிரான்ஸில் மரணம்

இணுவிலைச் சேர்ந்த தம்பையா ரவிச்சந்திரன் பிரான்ஸில் அகால மரணமானார்.

இரண்டு நாட்களாக அவரைக் காணாததினால் சகோதரர்கள் தேடினார்கள் —

மூன்றாம் நாள் அவரின் உடல் கடற்கரையில் கண்டெடுக்கப்பட்டது என்றும் அறிய வருகின்றது. (க)

சந்நிதி தீர்த்தம் சிறப்பாக நடந்தது

வடமராட்சி, ஓ. 22

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயகோ. தீர்த்த உற்சவங்கள் நேற்று முன்தினமும், நேற்றும் மிக அடக்கமாகவும் அமைதியாகவும் அதே வேளை சிறப்பாகவும் நடைபெற்றன.

தேர்த்திருவிழாவன்று பக்தர்கள் சற்றுக் குறைவாக இருந்தபோதும், நேற்று நடைபெற்ற தீர்த்தோற்சவத்தில் பக்தர்கள் பெருந்திரளாகக் கலந்துகொண்டார்கள். (அ-173)

நல்லூர் மஞ்சம்

யாழ்ப்பாணம், ஓ. 22

நல்லூர் கந்தசுவாமி கோவில் மஞ்சத் திருவிழா நேற்று பக்திபூர்வமாக நடைபெற்றது.

முந்திய வருடங்களை விட மிகப் பெரும் எண்ணிக்கையான அடியார்கள் நேற்று அழகிய சித்திர மஞ்சத்தில் பவனி வந்த முருகனின் அருட் காட்சியைத் தரிசித்தனர். (அ-30)

மரண அறிவித்தல்கள்

சிவஸ்ரீ சோமசுந்தரக்குருக்கள் வெங்கடேசக் குருக்கள்

(முருகையர்)

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோவில் முன்னாள் பிரதம குருக்கள் சிவஸ்ரீ சோமசுந்தரக்குருக்கள் வெங்கடேசக் குருக்கள் நேற்று (21 - 08 - 94) சிவபதம் அடைந்தார்.

இவர் மீனாட்சி அம்மாளின் அன்புக் கணவராவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (22 - 08 - 94) காலை 10 மணியளவில் கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயத்திற்கு அண்மையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்

இவ்வறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள், அயலவர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்

சிவஸ்ரீ வெ. சோமசுந்தரக் குருக்கள்
(சுப்பையர்)
சிவஸ்ரீ இ. விஸ்வேஸ்வரக் குருக்கள்
(சந்திரன ஐயர்)
சிவஸ்ரீ இ. சூரியப்பிரபாகரக் குருக்கள்
(சூரி ஐயர்)
பிரம்மஸ்ரீ இ. முரளீதரசர்மா
(முரளி ஐயர்)
[பெறாமக்கள்)

(32514)

பிலிப்புப்பிள்ளை மரியம்மா

(சில்லாலை)

சில்லாலை தெற்கைச் சேர்ந்த பிலிப்புப்பிள்ளை மரியம்மா (ஆசை) காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான பிலிப்புப்பிள்ளை, றோசமுத்து ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கிறிஸ்தோப்பர், பெர்ணடேற், றாமா, பொன்னுத்துரை, அருளானந்தம், மரியநாயகம், அந்தோனிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், பிலோமினா, சொறற்றி, நவம், கலா, றூபா, நிமால், விமால், சசி, வும்சி, அமிர்தா ஆகியோரின் அன்பு மாமியும், வதனி, கிளெனி, சிறீதரன், ஹரி, அலன், அனிஷா, அறோஸ், ஆன்றி, அருள் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று [22 - 08 - 1994 பிற்பகல் 3 00 மணிக்கு அருகிலுள்ள சர்த்தர் கோயிலில் நடைபெற்று, சில்லாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்,
யூட் கிளென்னி
(பேரன்)

உடுவில் தெற்கு,
மானிப்பாய்.
(சர்த்தர் கோயில் அருகில்)

(32517)

மீசாலை வடக்கு = கொடிகாமம்

ஸ்ரீ இராமாவில் கந்தசுவாமி கோவில்

விநாயகப் பெருமானதும் முருகப் பெருமானதும்

சித்திரப் பெருந்தேர்கள்

வெள்ளோட்டம்

காலம்: **22-08 1994** திங்கட்கிழமை பி. ப. **2** மணி

ஆசியுரைகள்:

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
(நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம்)
சிவஸ்ரீ ச. மகாலிங்கசிவக் குருக்கள் (நாயன்மார்கட்டு)

தனது 100 - ஆவது, 101 - ஆவது

தேர்களை நிர்மாணித்துள்ள ஸ்தபதி "சிற்பச்சக்கரவர்த்தி"

ஆறுமுகம் ஜீவரத்தினம் அவர்களை

பொன்னாடை போர்த்திக் கௌரவித்தல்

சிறப்புரைகள்:

திரு. செ. கலைவாணன் அவர்கள் (தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர்)
பேராசிரியர் திரு. அ. சண்முகதாஸ் அவர்கள் (யாழ். பல்கலைக்கழகம்)
கம்பவாரிதி இ. ஜெயராஜ் அவர்கள் (கம்பன் கழகம்)
திரு. சி. சிவலிங்கராசா அவர்கள்
(சிரேஷ்ட விரிவுரையாளர் யாழ் பல்கலைக்கழகம்)
திரு: க. சந்திரசேகரம் அவர்கள் (அதிபர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி)
திரு. அ. ஆறுமுகம் அவர்கள் J P.

விசேட மேளம்

திரு. எம். சிவசாமி குழுவினர்
திரு. M பஞ்சாபிகேசன், M. P. நாகேந்திரம் குழுவினர்

இங்ஙனம்
இராமாவில் கந்தசுவாமி கோவில்
தேர்ச்சபை

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

(32516)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 22 - 08 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.